# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## தமிழ்நாடு காவல்துறையில் இரண்டாம் நிலை ஆண்/பெண் காவலர்கள் தேர்வு 2009

## விளம்பர எண் . 1/2009

I) இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்கண்ட தகுதி பெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து இரண்டாம் நிலை காவலர்கள் பதவிக்கு பொது விண்ணப்பதாரர்களிடமிருந்தும் மற்றும் விளையாட்டுகளில் திறமையுடையவர்களிடமிருந்து விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் (Sports Quota) கீழும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

II) இரண்டாம் நிலை காவலர் ஆண்/பெண் பதவிகளுக்கு உள்ள மொத்த காலி இடங்களில் 5% விளையாட்டிற்கான ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும். இவ்விளம்பரத்தின் பத்தி IV 'அ'-வில் குறிப்பிட்டுள்ள விளையாட்டுகளில் பத்தி 'ஆ' (iv)-ல் குறிப்பிட்டுள்ள சான்றுகள் பெற்றிருந்தால் மட்டுமே விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

III) **அனைத்து பதவிக்கும் விண்ணப்பிப்போருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்.**

*(அ)* **வயது :**

**1)** 01.07.2009 அன்று 18 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும். (30.06.1991 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்).

**2)** 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். (01.07.1985 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

**3)** **பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்** : 01.07.2009 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01.07.1983 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

**4)** **ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்** : 01.07.2009 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1980 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

**5)** (i) **முன்னாள் இராணுவத்தினர்** : 01.07.2009 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01.07.1964 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

(ii) முன்னாள் இராணுவத்தினர் : இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு இந்த அறிவிக்கை வெளிவந்த தேதியில் மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

(iii) இராணுவத்தில் வாகன ஓட்டுனர் (Driver), தானியங்கி கம்மியர் (Auto Mechanic), தானியங்கி மின் வினைஞர் (Auto Electrician) மற்றும் படைகலன் பழுது பார்ப்போர் (Armourers) ஆக பணிபுரிந்தோருக்கு எழுத்துத் தேர்வு மட்டுமே நடைபெறும். இவர்களுக்கு உடல் கூறு அளத்தல், உடல் தாங்கும் திறனறித் தேர்வு (Endurance Test) மற்றும் உடல் திறன் போட்டிகள் கிடையாது. எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் அவர்களின் அசல் சான்றிதழ்களை, சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது சரிபார்ப்பதற்காக கொண்டு வரவேண்டும்.

**6)** **ஆதரவற்ற விதவைகள்** : எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் 01.07.2009 அன்று 18 வயது நிறைவு அடைந்தவராகவும், 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (அதாவது 01.07.1974 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

*(ஆ)* **உடல் அளவுகள் :**

**ஆண் :**

1) **உயரம்** : குறைந்த அளவு 168 செ.மீட்டர் இருக்க வேண்டும்.
ஆதி திராவிடர் / பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 165 செ. மீட்டர் இருக்க வேண்டும்.

2) **மார்பளவு** : அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் 81 செ.மீட்டர் இருக்க வேண்டும். மூச்சடக்கிய மார்வு விரிவாக்கம் (Expansion) குறைந்த அளவு 5 செ.மீட்டர் இருக்க வேண்டும்.

**பெண் :** 1) **உயரம்** : குறைந்த அளவு 157 செ.மீட்டர் இருக்க வேண்டும்.
ஆதி திராவிடர் / பழங்குடியினர் உயரம் குறைந்த அளவு 155 செ. மீட்டர் இருக்க வேண்டும்.

**இ) கல்வித் தகுதி :**

(1) பழைய பாடத்திட்டத்தின் படி எஸ்.எஸ்.எல்.சி.
அல்லது
புதிய பாடத்திட்டத்தின் படி 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(2) தமிழில் பேச,படிக்க மற்றும் எழுத நிறைவான அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு :-** 1) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பில் தமிழை ஒரு மொழிப் பாடமாக படித்திருக்க வேண்டும் அல்லது தமிழ் வழியாக பாடங்களைப் பயின்றிருக்க வேண்டும் அல்லது தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெற்ற இரண்டாம் நிலை தமிழ் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவ்வாறாக தமிழில் பேச, படிக்க மற்றும் எழுத தெரிந்தவர்கள் நிறைவான அறிவு பெற்றவராக கருதப்படுவர்.

2) மேலும், அவ்வாறு தமிழில் தேர்ச்சி பெறாதவர்கள் எவரேனும் இந்த தேர்வில் தேர்ச்சி பெற்று தேர்வு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள், தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில், பணியில் சேர்ந்த இரண்டு வருடங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

## IV) விளையாட்டுத் துறையில் திறமையுடையவர்கள் (ஆண் / பெண்) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் முறை :

விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் (ஆண்/பெண்) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே அனைத்து தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் கீழே குறிப்பிட்டுள்ள 14 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது அதற்கு மேற்பட்ட விளையாட்டுகளிலோ பத்தி ஆ (iv)-ல் குறிப்பிட்டுள்ள திறமை பெற்றிருக்க வேண்டும்.

***(அ) அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் :***

*1. கூடைப்பந்து, 2. கால்பந்து, 3. ஆக்கி, 4. கைப்பந்தாட்டம், 5. எறிபந்தாட்டம், 6. கபடி, 7. மல்யுத்தம், 8. குத்துச் சண்டை, 9. ஜிம்னாஸ்டிக்ஸ், 10. ஜூடோ, 11. பளு தூக்குதல், 12. நீச்சல் போட்டி, 13. தடகளப் போட்டிகள், 14. குதிரையேற்றம்.*

**(ஆ) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை :**

(i) பொது விண்ணப்பதாரர்களைப் போலவே விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களும் எழுத்துத் தேர்வு மற்றும் உடல் கூறு அளத்தல், உடல் தாங்கும் திறனறித் தேர்வு மற்றும் உடல் திறன் தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும்.

(ii) பொது விண்ணப்பதாரராக இருந்தாலும் அல்லது விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவராக இருந்தாலும் ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்ப வேண்டும்.

(iii) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கு விளையாட்டு போட்டித் தேர்வுகள் ஏதும் நடத்தப்பட மாட்டாது.

(iv) குறிப்பிட்ட 14 விளையாட்டுகளில் கீழ் கண்டவாறு சான்றிதழ்கள் பெற்றவர்கள் மட்டுமே விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள்.

(அ) சர்வதேச அளவில் இப்போட்டிகளில் கலந்து கொண்டதற்கான அல்லது வெற்றி பெற்றதற்கான சான்றிதழ். அதாவது படிவம்-Iல் பெற்ற சான்றிதழ்.

(ஆ) தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டதற்கான அல்லது வெற்றி பெற்றதற்கான சான்றிதழ். அதாவது படிவம்-IIல் பெற்ற சான்றிதழ்.

(இ) பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டதற்கான அல்லது வெற்றி பெற்றதற்கான சான்றிதழ். அதாவது படிவம்-IIIல் பெற்ற சான்றிதழ்.

இச்சான்றிதழ்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட விளையாட்டுத் துறை அதிகாரிகளால் வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(v) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளில் இவ்வறிவிக்கை வெளிவந்த நாளிலிருந்து 5 வருடங்களுக்குள்ளான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றதற்கான சான்றிதழை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். 5 வருடங்களுக்கு முன்பாக விளையாடிப் பெற்றதற்கான சான்றிதழை விண்ணப்பதாரர் விண்ணப்பத்துடன் இணைத்து இருந்தால் அவர் விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படாமல் பொது விண்ணப்பதாரராக கருதப்படுவார்.

(vi) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், எழுத்துத் தேர்வு, உடல் தகுதித் தேர்வு மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் (Special Marks) ஆகியவற்றில் பெற்ற மொத்த மதிப்பெண்களை வைத்து மட்டுமே வகுப்புவாரி விகிதாச்சாரப்படி தேர்வு செய்யப்படுவார்கள்.

(vii) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்து தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்ட பிறகு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப்படி பணி மூப்பு (Seniority) நிர்ணயிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

அ) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
ஆ) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.
இ) தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
ஈ) தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.
உ) பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் பதக்கம் பெற்றவர்கள்.
ஊ) பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.

(viii) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இறுதி தகுதிப் பட்டியலில் ஒரே வகுப்பினைச் சேர்ந்தவர்கள் ஒரே மதிப்பெண்கள் பெற்றிருந்தால் பொது விண்ணப்பதாரர்களைப் போலவே வயதில் மூத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(ix) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட முடியாத காலியிடங்கள் பொதுப்பட்டியலில் உள்ளவர்கள் மூலம் வகுப்புவாரி விகிதாச்சார ஒதுக்கீட்டை பின்பற்றி நிரப்பப்படும்.

V) **<u>பதவிகளின் மொத்த எண்ணிக்கை :</u>**

| | **MEN – 2800** | | | | | **WOMEN – 1200** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Open | Exe. Ward | Min. Ward | Sports Quota | Total | Open | Exe. Ward | Min. Ward | Sports Quota | Total |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| OC | 738 | 78 | 9 | 43 | 868 | 317 | 33 | 4 | 18 | 372 |
| BC | 631 | 67 | 7 | 37 | 742 | 270 | 29 | 3 | 16 | 318 |
| BCM | 83 | 9 | 1 | 5 | 98 | 36 | 3 | 1 | 2 | 42 |
| MBC | 476 | 50 | 6 | 28 | 560 | 204 | 22 | 2 | 12 | 240 |
| SC | 357 | 38 | 4 | 21 | 420 | 153 | 16 | 2 | 9 | 180 |
| SCA | 71 | 7 | 1 | 5 | 84 | 30 | 4 | - | 2 | 36 |
| ST | 24 | 3 | - | 1 | 28 | 10 | 1 | - | 1 | 12 |
| **TOTAL** | 2380 | 252 | 28 | 140 | **2800** | 1020 | 108 | 12 | 60 | **1200** |

VI) **ஊதிய விவரம்** : ரூ.5200 -- 20200 + 1900 (Pay Band + Grade Pay) மற்றும் இதர படிகள்.

VII) **வகுப்புவாரி விகிதாச்சாரம்** : (1) தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி வகுப்புவாரி விகிதாச்சார ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படும்.

(2) காவல் பணியாளர்களைச் சார்ந்துள்ளோருக்கு மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களைச் சார்ந்துள்ளோருக்கு சிறப்பு ஒதுக்கீடு : பணிபுரியும் காவல் பணியாளர்களைச் சார்ந்துள்ளோர் மற்றும் ஓய்வு பெற்ற, இறந்த, மருத்துவரீதியாக தகுதியின்மை பெற்ற காவல் பணியாளர்களின் வாரிசு மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு மொத்தப் பணியிடங்களில் 10 சதவீதம் ஒதுக்கப்படும். மேற்படி 10 சதவீத ஒதுக்கீட்டிலிருந்து பணியிலுள்ள காவல்துறை அமைச்சுப் பணியாளர்களைச் சார்ந்துள்ளோர்களைக் கொண்டு 10 சதவீதம் நிரப்பப்படும். வாரிசு ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட முடியாத காலியிடங்கள் பொதுப்பட்டியலில் உள்ளவர்கள் மூலம் வகுப்புவாரி விகிதாச்சார ஒதுக்கீட்டைப் பின்பற்றி நிரப்பப்படும்.

VIII) **முக்கிய தேதிகள்**

| வரிசை எண் | இத்தேர்வுக்கான முக்கிய தேதிகள் | நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1 | விளம்பரம் வெளியிடப்பட்ட நாள் | **27.06.2009** | |
| 2 | விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | **29.07.2009** | மாலை 5.45 மணி |
| 3 | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் | **25.10.2009** | காலை 9.00 மணி |

IX) **இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பின் வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் உள்ளது போல் படிவம் தயாரித்துப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். கணிப்பொறி உபயோகத்திற்காக விண்ணப்பத்தினை ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்ப வேண்டும்.**

## விண்ணப்பப் படிவம் (விளம்பர எண் . 1/2009)

| குறியீட்டு எண் |
|---|
| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் |

**அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் 5 செ.மீ. X 7 செ.மீ. இங்கே ஒட்டவும்**

1. அ) பெயர் :
   (ஆங்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் பள்ளிச் சான்றில் உள்ளபடி)
   ஆ) ஆண் ☐ ; பெண் ☐ ; (உரிய அடைப்பில் ✔ குறியீடு செய்யவும்)
2. தந்தை பெயர் / கணவர் பெயர் :
3. பிறந்த தேதி :
4. கல்வித்தகுதி :
5. நாட்டினம் (Nationality) :
6. மதம் (Religion) : இந்து ☐ ; இஸ்லாமியர் ☐ ; கிருஸ்தவர் ☐ ; பிற மதத்தினர் ☐
7. வகுப்பு :
   (i) ஏனையோர் (OC) ☐ ; (ii) பிற்பட்ட வகுப்பு (BC) ☐ ; (iii) பிற்பட்ட வகுப்பு முஸ்லீம் (BCM) ☐ ;
   (iv) மிகவும் பிற்பட்ட வகுப்பு / சீர்மரபினர் (MBC/DNC) ☐ ; (v) ஆதி திராவிடர் (SC) ☐ ;
   (vi) ஆதி திராவிடர் அருந்ததியர் (SCA) ☐ ; (vii) பழங்குடியினர் (ST) ☐
8. நீவீர் திருமணமானவரா? : ஆம் / இல்லை
9. (அ) நீவீர் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரா? : ஆம் / இல்லை
   (ஆ) ஆம் எனில் விடுவிக்கப்பட்ட சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
10. (அ) இராணுவத்தில் வாகன ஓட்டுனர்/ தானியங்கி கம்மியர் / மின் வினைஞர்/ படைகலன் பழுது பார்ப்போர் ஆக பணிபுரிந்துள்ளீரா? : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
11. (அ) நீவீர் ஆதரவற்ற விதவையா? (பெண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
12. (அ) நீவீர் விளையாட்டின் ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்துள்ளீரா? : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் எந்த சான்று இணைக்கப்பட்டுள்ளது என்பதை ✔ குறியீடு செய்யவும்
    i) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற சான்று : ☐
    ii) சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட சான்று : ☐
    iii) படிவம் I சான்று : ☐
    iv) தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற சான்று : ☐
    v) தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட சான்று : ☐
    vi) படிவம் II சான்று : ☐
    vii) பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் பதக்கம் பெற்ற சான்று : ☐
    viii) பல்கலைக் கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் கலந்து கொண்ட சான்று : ☐
    ix) படிவம் III சான்று : ☐
13. (அ) காவல்துறை பணியாளர் அல்லது அமைச்சுப் பணியாளரின் வாரிசுதாரரா? : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
14. (அ) நீவீர் ஏற்கனவே ஏதேனும் அரசுப் பணியில் உள்ளீரா? : ஆம் / இல்லை
    (ஆ) ஆம் எனில் தடையில்லாச் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
15. சிறப்பு மதிப்பெண்கள் (NCC, NSS, Sports) சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
    ஆம் எனில் உரிய அடைப்பில் ✔ குறியீடு செய்யவும்
    NCC ☐ ; ☐ NSS ; ☐ Sports
16. விண்ணப்பதாரர் முகவரி
    அ) கதவு எண் : ஆ) தெருவின் பெயர் :
    இ) கிராமம் / நகரத்தின் பெயர் : ஈ) அஞ்சல் நிலையம் :
    உ) மாவட்டத்தின் பெயர் : ஊ) பின்கோடு :
    எ) முகவரிக்குட்பட்ட காவல் நிலையத்தின் பெயர் :
17. வங்கி வரைவோலை விவரம் :
    அ) வங்கியின் பெயர் : ஆ) வரைவோலை எண் :
    இ) தேதி : ஈ) தொகை :
18. உம் மீது ஏதாவது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா? அல்லது நிலுவையில் உள்ளதா? : ஆம் / இல்லை
    அதன் விவரம் (வழக்கு எண் ________________, நாள் ______________, சட்டப்பிரிவு _______________, காவல் நிலையத்தின் பெயர் - ____________________ மற்றும் தற்போதைய நிலை ____________________)

### உறுதிமொழி

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானது எனவும், முழுமையானது எனவும், சரியானது எனவும், நான் சான்றளிக்கிறேன். மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் பொய்யானவை என்றோ, தவறானவை என்றோ, நான் தகுதியற்றவன்/தகுதியற்றவள் என்றோ எத்தருணத்தில் தெரியவந்தாலும் என் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் எனது தேர்வினை ரத்து செய்யலாம் என்று இதன் மூலம் நான் ஒப்புதல் அளிக்கிறேன். பணி நியமனத் தேர்வு குறித்த நடைமுறைகளுக்கும் தேர்வுகளின் சட்ட திட்டங்களுக்கும் நான் உட்படுகிறேன் என உறுதியளிக்கிறேன். மேலும், நான் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் கையேட்டினை முழுவதும் படித்து அறிந்து அதன் விவரங்களை தெரிந்து கொண்டு இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து சான்று நகல்களின் விவரம்</u>

| | | |
|---|---|---|
| 1. | 2. | 3. |
| 4. | 5. | 6. |
| 7. | 8. | 9. |
| 10. | 11. | 12. |

## IX) விண்ணப்பிக்கும் முறை:

1) மாதிரி விண்ணப்பப் படிவத்தினை 21 செ.மீ. x 30 செ.மீ ( foolscap) அளவில் வெள்ளைத் தாளில் தெளிவாக தட்டச்சு செய்து ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து நேரிலோ அல்லது தபாலிலோ **29.07.2009** அன்று மாலை 5.45 மணிக்குள் சென்னை - 2 எண்.807, அண்ணா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தில் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

2) நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் U:.150/-க்கான பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து வாங்கப்பட்ட வரைவோலை ( Demand Draft) ஒன்றினை சென்னையில் காசாக்க ஏதுவாக " The Chairman, Tamilnadu Uniformed Services Recruitment Board, Chennai - 600 002 " என்ற பெயருக்கு எடுத்து விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

3) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு விண்ணப்பக் கட்டணத்தைப் பொறுத்தவரை எந்த சலுகையும் கிடையாது.

4) வரைவோலை இல்லாமல் ரொக்கப் பணமோ, அஞ்சல் ஆணையோ, வரைவோலை எடுத்ததற்கான வங்கி இரசீதையோ அனுப்பக் கூடாது.

5) தன் முகவரியிட்ட U:.6/- க்கான தபால் வில்லை ஒட்டிய 25 செ.மீ X 12 செ.மீ அளவிற்குக் குறையாத உறையினை இணைத்து அனுப்ப வேண்டும்.

6) உறையின் மேற்பகுதியில் "தமிழ்நாடு காவல் துறை ஆண் / பெண் காவலர்கள் தேர்வு 2009" என்று குறிப்பிடவும்.

7) கீழ்க்கண்ட சான்றிதழ்களின் <u>நகல்களை</u> மட்டுமே A அல்லது B பிரிவு அரசு அலுவலரின் சான்றொப்பம் (Attestation) பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்துடன் இணைக்காமல் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்த சான்றிதழ்களும் / நகல்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- i) வயதை நிU:பிக்கச் சான்று (Transfer Certificate / SSLC Mark Sheet).
- ii) கல்விச் சான்று.
- iii) சாதிச் சான்று (அரசாணை நிலை எண் 2137 ஆதி திராவிடர்/பழங்குடி நலத்துறை, நாள் 11.11.1989-ன் படி பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்கள், வருவாய் கோட்டாட்சி அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் நகலை மட்டுமே சமர்பிக்க வேண்டும். 11.11.1989-க்கு முன்னர் தாசில்தார் அவர்களால் வழங்கப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்தவருக்கான சாதிச் சான்றிதழின் நகலை சமர்ப்பித்தாலும் செல்லுபடியாகும்.
- iv) இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பின் அதற்கான சான்று (Discharge Certificate).
- v) இராணுவத்தில் வாகன ஓட்டுனர் / தானியங்கி கம்மியர் / மின் வினைஞர் / படைகலன் பழுதுபார்ப்போர் ஆக பணிபுரிந்திருப்பின் அதற்கான சான்று.
- vi) ஆதரவற்ற விதவைக்கான சான்று (சம்பந்தப்பட்ட கோட்டாட்சியரிடமிருந்து [RDO/ Sub- Collector / Dy. Collector] பெற்றிருக்கவேண்டும்).
- vii) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பித்திருந்தால் இந்த விளம்பரத்தின் பத்தி IV (ஆ) (iv)ல் குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் நகல்களை தவறாமல் இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் அந்த விண்ணப்பதாரர் பொது விண்ணப்பதாரராக கருதப்படுவார்.
- viii) பணிபுரியும் காவல் பணியாளர்களைச் சார்ந்துள்ளோர் மற்றும் ஓய்வு பெற்ற, இறந்த, மருத்துவரீதியாக தகுதியின்மைப் பெற்ற காவல் பணியாளர்களின் வாரிசு / சார்ந்துள்ளோர் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களைச் சார்ந்துள்ளோர் அதற்குரிய வாரிசு / சார்ந்துள்ளோர் சான்றிதழை காவல் கண்காணிப்பாளர் / இணை ஆணையர் / ஆணையர் (SP/JCOP/COP) பதவியில் உள்ள அதிகாரியிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும். வாரிசு சான்றிதழை விண்ணப்பப்படிவத்தோடு இணைக்காவிட்டால் அந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் வாரிசுக்கான ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒரு

குடும்பத்தில், ஒரு விண்ணப்பதாரருக்கு மட்டுமே வாரிசு ஒதுக்கீடு வழங்கப்படும். வாரிசுதாரர் ஏற்கனவே மத்திய அல்லது மாநில அரசுப் பணியில் இருந்தால் வாரிசுதாரராக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார். வாரிசு சான்றிதழ் இந்த விளம்பரம் வெளிவந்த நாளுக்குப் பிறகு உரிய அதிகாரியிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

ix) தேசிய மாணவர் படை, தேசிய சமுதாயப் பணி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற சான்றிதழ்கள்.

8) நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை "தலைவர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், P.T. Lee. செங்கல்வராய நாயக்கர் டிரஸ்ட் மாளிகை, 2-வது தளம், எண். 807, அண்ணா சாலை, சென்னை - 600 002" என முகவரியிட்டு அனுப்பவும்.

9) ஒருவர் ஒரு விண்ணப்பத்தினை மட்டுமே அனுப்ப வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10) அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தில் ஒட்டவும்.

11) விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பியளிக்கப்படமாட்டாது.

12) சரியாகப் பூர்த்தி செய்யப்படாத, கையொப்பமிடப்படாத, புகைப்படம் ஒட்டப்படாத, தகுதியற்ற, தகுதி குறித்த சான்றிதழ் இணைக்கப்படாத, சரியான முகவரியிடப்படாத, வங்கிவரைவோலையற்ற, வங்கி வரைவோலையில் வங்கி அதிகாரியின் கையொப்பம் இல்லாத அல்லது குறைந்த மதிப்புடைய வங்கி வரைவோலையுடன் கூடிய விண்ணப்பங்கள் முதல்கட்ட பரிசீலனையிலேயே முன்னறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும்.

13) பல்வேறு தேர்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல்நல பாதிப்பு மற்றும் காயங்களுக்கு இத்துறையோ, தேர்வுக் குழுமமோ, அரசோ பொறுப்பேற்காது.

X) <u>அழைப்புக் கடிதம்</u> :

எழுத்துத் தேர்வு **<u>25.10.2009</u>** ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும். இத்தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் தேர்வு மைய விவரங்களுடன் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும்.

XI) <u>தேர்வு முறைகள் :</u>

i) தகுதியுடைய அனைத்து விண்ணப்பதாரர்களும் எழுத்துத் தேர்வினை எழுத வேண்டும். எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பின் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் உடல் கூறு அளத்தல், உடல் தாங்கும் திறனறித் தேர்வு மற்றும் உடல் திறன் தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

ii) <u>எழுத்துத் தேர்வு</u> : எழுத்துத் தேர்வு கீழ்கண்டவாறு இருக்கும் :

| | | | |
|---|---|---|---|
| அ. | பொது அறிவு (குறியிலக்கு முறையில், தமிழில்) | : | 50 மதிப்பெண்கள் |
| ஆ. | உளவியல் / மனோதத்துவ தேர்வு (குறியிலக்கு முறையில், தமிழில்) | : | 30 மதிப்பெண்கள் |
| | மொத்தம் | : | 80 மதிப்பெண்கள் |

iii) (1) பொது அறிவுத் தேர்வு பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தரத்திற்கு இருக்கும். உளவியல் தேர்வு தேர்வாளரின் இயற்கையான ஆற்றலையும் மனோபாவத்தையும் சோதிப்பதாய் இருக்கும். ஒரே கேள்வித்தாளில் பகுதி "அ" பொது அறிவு வினாக்களையும், பகுதி "ஆ" உளவியல் வினாக்களையும் கொண்டதாக எழுத்துத் தேர்வு இருக்கும்.

(2) எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 28 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

(3) எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் வகுப்புவாரி விகிதாச்சாரப்படி, மொத்த பதவிகளின் எண்ணிக்கையைப் போல் 5 மடங்கு தேர்வாளர்கள் அடுத்தக்கட்ட தேர்வான

உடல் கூறு அளத்தல் உடல் தாங்கும் திறனறித் தேர்வு மற்றும் உடல் திறன் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

(4) இத்தேர்வு தொடர்பான பாடதிட்டங்கள் இந்த தேர்வுக் குழுமத்தின் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் தனியாக வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் ( Prospectus ) தெரிவிக்கப்பட்டுள்ளது.

iv) ***அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல்*** : எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு மட்டுமே அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும். விண்ணபப்த்துடன் அனுப்பிய சான்றிதழ்களின் அசல்கள் அனைத்தையும் தேர்வு மையத்திற்கு குறிப்பிட்ட தேதியில் சரிபார்ப்பதற்காக அவசியம் கொண்டுவர வேண்டும்.

v) ***உடல் கூறு அளத்தல் (Physical Measurement Test):*** எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று, கல்வி, வயது ஆகியவற்றில் தகுதியுடையவர்கள் மட்டும் இத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். உடல் கூறு அளத்தலில் தேர்வு பெற்றவர்கள் உடல் தாங்கும் திறனறித் (Endurance) தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

vi) ***உடல் கூறு அளத்தலில் மேல் முறையீடு*** : உடல் கூறு அளத்தலில் (உயரம் மற்றும் மார்பளவு) ஏதேனும் மேல்முறையீடு இருந்தால் விண்ணபதாரர்கள் உடனே அங்குள்ள தேர்வு மைய குழுத் தலைவரை அணுகி முறையிடலாம். மேல்முறையீட்டாளர்களுக்கு உடனே மீண்டும் உடல் கூறு அளத்தல் அந்த மையத்தில் உள்ள குழுத் தலைவர் அவர்களால் நடத்தப்படும். பின்னர் பெறப்படும் எந்த மேல்முறையீடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

vii) ***உடல் தாங்கும் திறனறித் தேர்வு (Endurance Test) :***

i) ஆண் விண்ணபதாரர்கள் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களில் முடிக்க வேண்டும். இதில் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

ii) பெண் விண்ணபதாரர்கள் 400 மீட்டர் ஓட்டத்தினை 2 (இரண்டு) நிமிடங்களில் முடிக்க வேண்டும். இதில் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

viii) ***உடல் திறன் தேர்வுகள் (Physical Efficiency Test) :*** **உடல் தாங்கும் திறனறித் தேர்வில் தகுதியுடைவர்கள் மட்டும் கீழ்க்காணும் உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.**

| வ. எண். | ஆண்கள் | | | பெண்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | தேர்வுகள் | 1 நட்சத்திரம் 2 மதிப்பெண்கள் | 2 நட்சத்திரம் 5 மதிப்பெண்கள் | தேர்வுகள் | 1 நட்சத்திரம் 2 மதிப்பெண்கள் | 2 நட்சத்திரம் 5 மதிப்பெண்கள் |
| 1 | கயிறு ஏறுதல் | 5 மீட்டர்கள் | 6 மீட்டர்கள் | நீளம் தாண்டுதல் | 3.25 மீட்டர்கள் | 3.75 மீட்டர்கள் |
| 2 | நீளம் தாண்டுதல் (அல்லது) உயரம் தாண்டுதல் | 3.80 மீட்டர்கள் 1.20 மீட்டர்கள் | 4.50 மீட்டர்கள் 1.40 மீட்டர்கள் | கிரிக்கெட் பந்து எறிதல் (அல்லது) குண்டு எறிதல் | 17 மீட்டர்கள் 4.50 மீட்டர்கள் | 21 மீட்டர்கள் 5.50 மீட்டர்கள் |
| 3 | 100 மீட்டர் ஓட்டம் (அல்லது) 400 மீட்டர் ஓட்டம் | 15.0 வினாடிகள் 80.0 வினாடிகள் | 13.5 வினாடிகள் 70.0 வினாடிகள் | 100 மீட்டர் ஓட்டம் (அல்லது) 200 மீட்டர் ஓட்டம் | 16.50 வினாடிகள் 36 வினாடிகள் | 15.50 வினாடிகள் 33 வினாடிகள் |

ஆண் தேர்வாளர்கள் :- 3 தேர்வுகளில் கயிறு ஏறுதல் அனைவருக்கும் கட்டாயமாகும். கயிறு ஏறுதல் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே பிற போட்டிகளுக்கு தகுதியுடையவர் ஆவார்கள். அடுத்ததாக நீளம் தாண்டுதல் அல்லது உயரம் தாண்டுதலில் ஏதேனும் ஒன்றையும் மற்றும் 100 மீட்டர் ஓட்டம் அல்லது 400 மீட்டர் ஓட்டத்தில் ஏதேனும் ஒன்றையும் தேர்ந்தெடுத்து கலந்து கொள்ள வேண்டும். இத்தேர்வுகளில் ஏதேனும் ஒரு தேர்வில் தகுதி பெறவில்லையெனில் அந்த விண்ணப்பதாரர் தேர்வில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார். மேற்படி 3 தேர்வுகளில், ஒவ்வொரு தேர்விலும் குறைந்தது ஒரு நட்சத்திரத் திறனுடன் மொத்தம் 3 நட்சத்திரங்கள் பெற்று குறைந்தது 6 மதிப்பெண்கள் பெற வேண்டும். அவ்வாறு பெறாதவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர். நீளம் மற்றும் உயரம் தாண்டுதல் தேர்வுகளுக்கு மட்டும் 2 வாய்ப்புகள் அளிக்கப்படும். கயிறு ஏறும் பொழுது கைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். கயிறு ஏற கால்களைப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு பயன்படுத்தினால் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள். ஆண் தேர்வாளர்கள் எழுத்துத் தேர்வு, உடல் திறன் தேர்வு மற்றும்

சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெறும் மொத்த மதிப்பெண்களைச் சேர்த்து கணக்கிட்டு வகுப்புவாரி விகிதாச்சாரப்படி தேர்வு செய்யப்படுவர்.

<u>பெண் தேர்வாளர்கள்</u> :- உடல் திறன் தேர்வில் கண்டிப்பாகக் கலந்து கொள்ளவேண்டும், மேலே கொடுக்கப்பட்டுள்ள 3 தேர்வுகளில் நீளம் தாண்டுதல் பெண் தேர்வாளர்கள் அனைவருக்கும் கட்டாயமாகும். அடுத்தாக, கிரிக்கெட் பந்து எறிதல் அல்லது குண்டு எறிதல் போட்டியில் ஏதேனும் ஒன்றையும், 100 மீட்டர் ஓட்டம் அல்லது 200 மீட்டர் ஓட்டத்தில் ஏதேனும் ஒன்றையும் தேர்ந்தெடுத்து கலந்து கொள்ள வேண்டும். நீளம் தாண்டும் தேர்வுக்கு மட்டும் 2 வாய்ப்புகள் அளிக்கப்படும். குண்டு எறிதல் அல்லது பந்து எறிதல் போட்டி மற்றும் ஓட்டத்திற்கு ஒரு வாய்ப்பு மட்டும் அளிக்கப்படும். இந்த உடல் தகுதித் தேர்வுகளில் நட்சத்திரம் மற்றும் மதிப்பெண் பெறவில்லை என்றாலும் பெண் தேர்வாளர்கள் 3 தேர்வுகளிலும் கலந்து கொள்ள வேண்டும். எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், உடல் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெறும் மொத்த மதிப்பெண்களை கணக்கிட்டு வகுப்புவாரி விகிதாச்சாரப்படி பெண் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

XII) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் ஆண்/பெண் விண்ணப்பதாரர்களை ஒதுக்கீடு செய்வதில் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் நிரப்பப்படாத காலியிடங்கள் பொது விண்ணப்பதாரர்களைக் கொண்டு அந்தந்த வகுப்புவாரி விகிதாச்சாரப்படி நிரப்பப்படும்.

XIII) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் தமிழ்நாடு சிறப்பு காவல் படைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அதன் பின்னர் தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி விதிகளின் படி பிற பிரிவுகளுக்கு மாறுதலில் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

XIV) <u>மருத்துவத் தேர்வு</u> : எழுத்துத் தேர்வு, உடல் திறன் தேர்வு மற்றும் சிறப்பு மதிப்பெண் ஆகியவற்றில் பெறும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் இந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள காலியிடங்களுக்கு வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி தகுதியானவர்கள் மட்டுமே மருத்துவத் தேர்வு மற்றும் காவல் விசாரணைக்கு தமிழ்நாடு காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை - 4 அவர்களால் அழைக்கப்படுவர். லேசர் சிகிச்சை மூலம் கண் பார்வை தகுதி பெற்றிருந்தால் அது செல்லத்தக்கதல்ல. முதல் மருத்துவக் குழுமத்தின் அறிக்கையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படும். இரண்டாவது மருத்துவக் குழுமத்தால் அளிக்கப்படும் அறிக்கையே முடிவானதாகக் கருதப்படும்.

XV) <u>மதிப்பெண்களின் ஒதுக்கீடு</u> :

| | | | |
|---|---|---|---|
| 1. | எழுத்துத் தேர்வு [பொது அறிவு மற்றும் உளவியல் / மனோதத்துவம்] (குறியிலக்கு முறையில், தமிழில்) | : | 80 மதிப்பெண்கள் |
| 2. | உடல் திறன் தேர்வு | : | 15 மதிப்பெண்கள் |
| 3. | சிறப்பு மதிப்பெண்கள் (என்.சி.சி., என்.எஸ்.எஸ்., மற்றும் விளையாட்டு சான்றிதழ்கள்) ( இக்குழுமம் வகுத்துள்ள வரைமுறைகளின்படி அளிக்கப்படும் மதிப்பெண்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன) | : | 5 மதிப்பெண்கள் |
| | மொத்தம் | : | 100 மதிப்பெண்கள் |

**4.** என்.சி.சி./என்.எஸ்.எஸ்/விளையாட்டுகள் ஆகியனவற்றிற்கு வழங்கப்படும் சிறப்பு மதிப்பெண்கள் ( Special Marks) பற்றிய விவரங்கள் :

| | **மதிப்பெண்கள்** | |
|---|---|---|
| *(அ)* ***என்.சி.சி. (தேசிய மாணவர் படை)*** | | |
| (i) ஓராண்டு உறுப்பினர். | ½ | இவற்றில் எது அதிகமோ அந்த மதிப்பெண் மட்டும் வழங்கப்படும் |
| (ii) "B" சான்றிதழ். | **1** | |
| (iii) "C" சான்றிதழ் / சார்பு அலுவலர் / அகில இந்திய அளவில் சிறந்த மாணவர். | **2** | |
| *(ஆ)* ***என்.எஸ்.எஸ் (தேசிய சமுதாயப் பணி)*** | | |
| (i) திட்டசெயல் தொண்டர்கள். | ½ | |
| (ii) புதுதில்லியில் நடைபெறும் குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்பு, மாநில அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையில் நடத்தப்படும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் ஊக்கப்படுத்தும் முகாம்கள், மாநிலங்களுக்கு இடையேயான இளைஞர்களுக்கான பரிமாற்ற நிகழ்வுகள். | ½ | இவற்றில் எது அதிகமோ அந்த மதிப்பெண் மட்டும் வழங்கப்படும் |
| (iii) தேசிய சமுதாயப்பணி திட்டத்தின் தலைவர் / சிறந்த மாணவர். | **1** | |
| *(இ)* ***விளையாட்டுகள் / தடகளப் போட்டிகள்*** | | |
| (i) *(அ)* பள்ளியின் சார்பாக பள்ளிகளுக்கிடையேயான கல்வி மாவட்டங்கள் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்.<br>*(ஆ)* கல்லூரியின் சார்பாக கல்லூரிகளுக்கிடையேயான மண்டல போட்டிகளில் கலந்து கொண்டவர்கள். | ½ | இவற்றில் எது அதிகமோ அந்த மதிப்பெண் மட்டும் வழங்கப்படும் |
| (ii) *(அ)* பல்கலைக்கழகங்ளின் சார்பாக பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அதாவது Form-III.<br>*(ஆ)* மாவட்டங்கள் சார்பாக மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள். | **1** | |
| (iii) மாநிலத்தின் சார்பாக மாநிலங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அதாவது Form-II. | **1½** | |
| (iv) தேசத்தின் சார்பாக சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் அதாவது Form-I. | **2** | |
| *(ஈ)* ***அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்*** | | |
| ***1.*** *கூடைபந்து,* ***2.*** *கால்பந்து,* ***3.*** *ஆக்கி,* ***4.*** *கைப்பந்தாட்டம்,* ***5.*** *எறிபந்தாட்டம்,* ***6.*** *கபடி,* ***7.*** *மல்யுத்தம்,* ***8.*** *குத்து சண்டை,* ***9.*** *ஜிம்நாஸ்டிக்ஸ்,* ***10.*** *ஜூடோ,* ***11.*** *பளு தூக்குதல்,* ***12.*** *நீச்சல் போட்டி,* ***13.*** *தடகளப் போட்டிகள்,* ***14.*** *குதிரையேற்றம்.* | | |
| **குறிப்பு :** என்.சி.சி.க்கு அதிகபட்சமாக இரண்டு மதிப்பெண்களும் / என்.எஸ்.எஸ்.க்கு அதிகபட்சமாக ஒரு மதிப்பெண்ணும் மற்றும் விளையாட்டு / தடகளபோட்டிகள் ஆகியனவற்றிற்கு அதிகபட்சமாக 2 மதிப்பெண்களும் என மொத்தம் 5 மதிப்பெண்கள் மட்டும் வழங்கப்படும். | | |

XVI) ஏற்கெனவே அரசுப் பணியில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அவரவர்கள் பணிபுரியும் துறை மூலம் தடையில்லாச் சான்று பெற்று அனுப்ப வேண்டும்.

XVII) **29.07.2009** அன்று மாலை *5.45* மணிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

XVIII) தேர்வு முடிவுகள் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். இணையதளத்தில் முடிவுகள் வெளியிடப்படும் செய்தி நாளிதழ்களில் வெளியிடப்படும். தேர்ச்சி பெறாதவர்களுக்கு தனித்தனியாக முடிவுகள் அனுப்பப்படமாட்டாது. இத்தேர்வு குறித்து பரிந்துரை செய்தாலோ அல்லது தகாத செயல்களில் ஈடுபட்டாலோ அவரின் விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும். இத்தேர்வு தொடர்பான அனைத்து விதிமுறைகளும், தகவல்களும் www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றை படித்து தெரிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தலைவர்
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை - 600 002.